# மருந்தெடுக்கலாமா?

வாசிக்க: லூக்கா 8:40-48

***"நான் மானிடரான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னால் செய்யமுடியாத அதிசயமான காரியம் எதுவுமுண்டோ?" (எரே 32:27)***

வியாதிக்கு மருந்து சாப்பிடுவது பாவம் என்று ஒரு சில சபைகளில் எண்ணுகின்றனர். நான் ஒருபோதும் மருந்தே தொடமாட்டேன் என்று தீர்மானம் எடுத்துவிட்டு, பின்னொரு நாள் மருந்தெடுக்கும் சூழ்நிலையில் குற்றவுணர்வுக்குள்ளாவோர் அநேகர். விசுவாசிகள் மருந்து சாப்பிடக்கூடாதெனும் உபதேசம் திருமறையில் எங்கும் கிடையாது.

நல்ல மருந்துகள் பல மூலிகைகளிலிருந்து எடுக்கப்படுபவை. அவற்றை நமது ஆரோக்கியத்திற்கும் பலத்திற்குமென்று தந்தவர் கடவுளே (ஆதி 1:29). தூதாயீம் பழத்தைச் சாப்பிட்டால் கருத்தரிக்கும் வாய்ப்பு கூடுமென நம்பப்பட்டு வந்ததால் ராகேல் லேயாளிடம் அதைக் கேட்டாள் (ஆதி 30:14). அரசன் எசேக்கியாவின் வாழ்நாளைக் கூட்டுவதாகக் கடவுள் வாக்களித்தபின்னரும், அவன் சுகமடைவதற்காக "அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து, அவனது பிளவையின்மேல் பற்றுப் போடுங்கள்" என்று மருத்துவ உதவி கொடுக்கச் சொன்னது ஏசாயா தீர்க்கதரிசிதான் (ஏசா 38:21).

நோயுற்றோருக்குச் செய்யப்படும் மருத்துவப் பணியை இயேசு ஆமோதித்தார் (மத் 9:12). குற்றுயிராயிருந்தவனின் காயங்களில் நல்ல சமாரியன் எண்ணெயும் திராட்சரசமும் ஊற்றிக் கட்டுப்போட்டான் (லூக் 10:34). விசுவாசிகளுக்கும் ஊழியருக்கும் கனிவோடு மருத்துவ உதவி செய்ததால் அல்லவோ லூக்காவைப் "பிரியமான" வைத்தியன் என்றழைத்திருக்கவேண்டும்? (கொலோ 4:14). தீமோத்தேயுவின் வயிற்றுக் கோளாறுக்குக் கொஞ்சம் திராட்சரசம் பருகிக்கொள்ள பவுல் கைப்பக்குவம் சொன்னான் (1 தீமோ 5:23).

மருத்துவரை "மட்டும்" தேடினதுதான் அரசன் ஆசா செய்த தவறு (2 நாளா 16:12). சிகிச்சைக்கு அவ்வளவு செலவழித்துவிட்டதற்காக இரத்தப்போக்கினால் பாடுபட்டுக்கொண்டிருந்த அப்பெண்ணை இயேசு கடிந்துகொள்ளவில்லை. மாறாக அவளை உற்சாகப்படுத்திக் கனிவுடன் குணமாக்கினார் (லூக் 8:43-48). மருத்துவமும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல; அவை இணைந்துபோகமுடியும். உலகிலுள்ள எல்லாக் கிறிஸ்தவ மருத்துவமனைகளிலும் ஜெபம், விசுவாசம், மருந்து ஆகிய மூன்றையும் கலந்துதான் நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். மருத்துவர்களும் கடவுள் தந்த ஈவுகளாவர் (எரே 8:22).

என்ன வியாதியானாலும் மருந்தே தொடாத நல்ல சகோதர சகோதரிகள் உண்டு. இது உண்மையாகவே மெச்சுதற்குரிய விசுவாசம்தான். ஆனால் இதை மற்றவர் மீது திணிக்கக்கூடாது. "உனக்கு விசுவாசமிருந்தால் அது கடவுளுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும்" (ரோ 14:22). எல்லாருடைய விசுவாச "அளவும்" ஒன்றுபோலிராது. இளம்பிள்ளைவாதத் தடுப்புமருந்து கொடுக்காத பெற்றோர் தங்கள் கடமையில் தவறுகின்றனர்.

பிரசங்கிமார், அதிலும் குறிப்பாக தெய்வீக சுகமளிப்பு ஊழியர், மருத்துவரிடம் செல்லத் தயங்கி, மனிதருக்கு அதை மறைக்கத் தேவையில்லை. பிரசங்கிகளும் சாதாரண மனிதர்தான் என்பதை மக்கள் அறியட்டும்! (அப் 14:15; கலா 4:13). நமது மீட்பின் முழுப் பலன்களை, அதிலும் குறிப்பாய் நமது உடல்களில், கிறிஸ்துவின் வருகையின்போதுதான் அனுபவிப்போம். அதுவரை நமக்குக் கிட்டுவது முதற்பலன்களே (ரோ 8:23; எபி 9:28).